## பொதுத்தமிழ்-பகுதி-இ-தமிழ் அறிஞர்களும், தமிழ் தொண்டும்

## அலகு – 4

## தமிழில் கடித இலக்கியம்

### 1. ஜவகர்லால் நேரு

### மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்

நமது இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர் ஜவகர்லால் நேரு. இவர், நம் நாடு விடுதலை பெற்றபின் முதல் முதன்மை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றார்.

அவருடைய அன்பு மகள்தான் இந்திராகாந்தி. 1922ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டுவரை 42 ஆண்டுகள் தம் மகளுக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.

நேரு வெளிநாட்டுக்குச் சென்ற பொழுதும், இந்தியாவில் இருந்தபொழுதும் மகளுக்குக் கடிதங்கள் எழுதினார். சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட பொழுதும்கூட, அவர் கடிதம் எழுதுவதனை நிறுத்தவே இல்லை.

தாகூரின் விசுவபாரதி கல்லூரியில் இந்திராகாந்தி சேர்ந்தபோது, அவர் எழுதிய கடிதம் இது. விசுவபாரதி கல்லூரி மேற்கு வங்காளத்தில் சாந்திநிகேதன் என்னும் இடத்தில் உள்ளது.

(அக்கடிதத்திலிருந்து ஒருபகுதி மட்டும் இங்கே பாடமாகத் தரப்பட்டுள்ளது.)

அல்மோரா மாவட்டச் சிறைச்சாலை,

1935 பிப்ரவரி 22.

செல்லமகள் இந்து!

சிறைச்சாலையில் நான் நலமாக இருக்கிறேன். கிருபாளினியின் உதவியுடன் படிக்கவேண்டிய பாடங்களை நீ முடிவு செய்துவிட்டாய் போலும். மகிழ்ச்சி. இப்படிப் பேராசிரியர்களைத் தனிப்பட்டமுறையில் சந்தித்துக் கலந்துரையாடுவது நல்லது. வகுப்பில் உட்கார்ந்து பாடங்களைக் கேட்பதனைவிட, இந்த அணுகுமுறை நல்லது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நான் படிக்கும்போதும், அதுதான் நிலைமை. வகுப்பறையில் நடக்கும் உரையாடல்களுக்கு நாங்கள் பெரிய முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம்; ஆசிரியர்களைத் தனியாகச் சந்தித்து உரையாடுவோம். அந்த உரையாடல் எங்கள் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன் உடையதாக இருந்தது.

நீ படிக்கும் சாந்திநிகேதனில் இத்தகைய நடைமுறை இருக்கிறதா? என்பது தெரியவில்லை; இல்லாவிட்டால் என்ன? ஆசிரியர்களைத் தனியே சந்தித்து உரையாடும் பழக்கத்தை நீ கடைப்பிடி.

நீ வாசிப்பதற்காக அவ்வப்போது புத்தகங்களை நான் அனுப்பலாமா? எனக் கேட்டிருந்தேன்; நீயும் அனுப்பச் சொல்லி எழுதி இருக்கிறாய். இப்போது எனக்குள் திகைப்பு என்னவென்றால், உனக்கு எப்படிப்பட்ட புத்தகங்களை அனுப்புவது என்பதுதான்.

புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது; கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படிச் செய்தால், புத்தக வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது. வெறுப்பே உண்டாகும். அதுமட்டும் அன்று; எந்தப் புத்தகத்தையும் வாசிக்க ஆசை வராது. முன்பு எல்லாம் நம்முடைய பாடப்புத்தகங்களும் தேர்வுகளும் இப்படி வெறுப்பு உண்டாக்கும் விளைவைத்தான் செய்தன. சேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் எவ்வளவு அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான புத்தகம் பிடிக்கும். குழந்தையாய் இருக்கும்போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும். இளைஞராய் இருக்கும்போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும்; வயது ஆக ஆக விருப்பம் மாறும்.

உனக்கு என்ன புத்தகம் வாசிக்கப் பிடிக்கும் எனச் சொல்! உனக்குக் கவிதை வாசிக்கப் பிடிக்குமா? அல்லது வரலாறு, நாட்டு நடப்பு, பொருளாதாரம் முதலிய புத்தகங்கள் பிடிக்குமா ? உன் ஈடுபாடு தெரிந்தபின் எந்தப் புத்தகம் வாசிக்கலாம் என்பது குறித்து, உனக்கு எழுதுவேன். உன்மீது புத்தகங்களைத் திணிக்க நான் விரும்பவில்லை.

சில புத்தகங்கள் பற்றிப் பொதுவாகப் பேசலாம். பிளேட்டோவின் புத்தகங்கள் சுவையானவை; சிந்தனையைத் தூண்டுபவை. கிரேக்க நாடகங்கள் நம்

ஆர்வத்தைத் தூண்டுபவை. அவை சுருக்கமாகவும் இருக்கும்; வாசிக்க எளிதாகவும் இருக்கும். நாடகங்களைப் பற்றிப் பேசுகிறோம். அது சரி! நீ காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை வாசித்திருக்கிறாயா? அது வாசிக்க வேண்டிய நூல்.

சென்ற ஆண்டு டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' என்னும் நாவலை வாசிக்கப் போவதாகச் சொன்னாய்; வாசித்துவிட்டாயா? உலகின் மிகச் சிறந்த நூல்களுள் அதுவும் ஒன்று. பெர்னாட்ஷாவின் பல நூல்களை நீ வாசிக்கவில்லை. அவருடைய நூல்கள் வாசிக்கத் தகுந்தவை.

எனக்கு மிகவும் பிடித்தமானவர் பெட்ரண்ட் ரஸ்ஸல். அவருடைய ஆங்கிலம் அருமையானது. அறிவார்ந்த எழுத்து அவருடையது.

நாம் ஏன் புத்தகம் வாசித்தல் வேண்டும்? அறிவு பெறுவதற்காக, மகிழ்ச்சி அடைவதற்காக எனப் பல காரணங்களைச் சொல்லலாம். அவை உண்மைதாம். ஆனால், இதற்குமேலும் ஒரு காரணம் உண்டு. ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை. அதனைப்புரிந்துகொள்ளவும், முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது.

தனியொரு மனிதனின் பட்டறிவு மிகவும் குறுகியது. புத்தகங்களில் மனிதர்களின் ஏராளமான பட்டறிவுச் சிந்தனைகள் அடங்கி உள்ளன. அவற்றை வாசிக்கும்போது, நாம் வசிக்கும் சிறுமூலையிலிருந்து வெளியேறுகிறோம். மலைமீது ஏறிநின்று, இதுவரை பார்க்காத உலகக் காட்சிகளைப் பார்க்கும் உணர்வைப் பெறுகிறோம்.

அன்புமிக்க,

உன் அப்பா.

| |
|---|
| கேம்பிரிட்ஜ் – இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகம் |
| சேக்ஸ்பியர் – ஆங்கில நாடக ஆசிரியர் |
| மில்டன் – ஆங்கிலக் கவிஞர் |
| பிளேட்டோ – கிரேக்கச் சிந்தனையாளர் |

காளிதாசர் – வடமொழி நாடக ஆசிரியர்

டால்ஸ்டாய் – இரஷ்ய நாட்டு எழுத்தாளர்

பெர்னாட்ஷா – ஆங்கில நாடக ஆசிரியர்

பெட்ரண்ட் ரஸ்ஸல் – சிந்தனையாளர்; கல்வியாளர்

அல்மோரா சிறை – உத்தராஞ்சல் மாநிலத்தில் உள்ளது.

கிருபாளினி – விசுவபாரதியில் பணிபுரிந்த பேராசிரியர்.

**2. மகாத்மா காந்தி**

**காந்தியடிகள் கடிதம்**

குஜராத்,

02.10.1917

அனைவருக்கும் என் இனிய வணக்கம். குழந்தைகள் அனைவரும் நலந்தானே? குஜராத் மாநிலத்தில் நான் ஆற்றிய உரையை, உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என விரும்பினேன். என் பிறந்தநாளில் அந்தக் கருத்துகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

பயிற்றுமொழியைப்பற்றி நிறைவான, தெளிவான ஒரு முடிவுக்கு வருவதுதான், கல்வி கற்பித்தலில் நாம் செய்யவேண்டிய முதல்செயல். பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதனைப் போன்றது.

இச்செய்தியைப்பற்றிக் கல்வியாளர்களிடையே இருவேறுபட்ட கருத்து நிலவி வருகின்றன. தாய்மொழியின்மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர் விவாதிக்கின்றனர். இந்த இரு வேறு கருத்திலும் உள்ள நன்மை, தீமைகளை ஆராய்ந்து இந்த விவாதத்திற்கு முடிவான ஒரு தீர்வு காணுதல் வேண்டும்.

கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம், ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழிமீது அவருக்கு இருந்த பற்றுதலும்தான்.

முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே. உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைப்போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது.

தாய்மொழியை வளமுறச் செய்வதற்குத் தேவையானவை, தங்கள் தாய்மொழியில் உள்ள பற்றும் மதிப்பும்தானே தவிர, ஆங்கில அறிவு இல்லை என்பதனை மேலே காட்டிய சான்றுகள் தெளிவாக விளக்குகின்றன.

ஒரு மொழியைப் பயன்படுத்துகின்றவர்களின் எண்ணங்கள், அம்மொழியில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். மொழியின் தன்மை, மக்களின் பண்பாட்டைச் சார்ந்திருப்பது இயற்கையே. மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும். 'வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது சீற்றம் கொண்டானாம்' என ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. மொழி, நிறைவு பெற்றதாக இல்லை எனக் குறை சொல்பவர்கள் இந்தத் தொழிலாளியைப் போன்றவர்களே. குறைபாடு, மொழியைப் பயன்படுத்துபவர்களிடம்தான் இருக்கிறதே அன்றி, மொழியில் இல்லை.

ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு, நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், தாய்மொழிமூலம் நமக்குக் கல்வி அளிக்கப் பட்டிருந்தால், நம்மிடையே பல போஸ்களும் இராய்களும் தோன்றியிருப்பார்கள்.

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருத்தல் வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். சிறந்த பயன் ஏற்பட வேண்டுமாயின், அத்தகைய தொடர்பு இன்றியமையாதது. தெரிந்தறியாத ஒருமொழியின்மூலம் கல்வி கற்பிப்பது, இந்த இணக்கத்தைக் குலைத்துவிடும்.

தாய்மொழியைக் கற்பித்தல்மொழியாக வைத்துக்கொண்டால், ஆங்கிலத்தில் அறிவைப் பெறுவது பாதிக்கப்படுமா, இல்லையா என்பதனைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டிய தேவையில்லை என்றே நினைக்கிறேன். படித்த இந்தியர் அனைவரும் அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை. இந்த அயல்மொழியிடம்

ஒரு பற்றுதலைத் தோற்றுவிப்பதோ ஊக்கம் அளிப்பதோ தேவையில்லை எனவும் நான் கருதுகிறேன்.

நீங்கள் உங்கள் தாய்மொழியில் அறிவுபெற வாழ்த்தும் ஆசியும்.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

(1917ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.)

**3. மு.வரதராசனார்**

**மு.வரதராசனாரின் கடிதம்**

**தம்பிக்கு**

அன்புள்ள எழில்,

ஆக்கவேலைமுறைகள் இன்ன இன்ன என்று வகுத்து அனுப்புமாறு எழுதியிருக்கிறாய், எழுதுவேன். அதற்குள் ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

தமிழரிலே தனித்தனியே இவர் இவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்வது பழைமை. தமிழர்கள் கூடிக்கூடி இன்னது செய்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும். சேர்ந்து செயல் செய்து உயரும் வல்லமை தமிழருக்கு உண்டு என்பதை இனி உலகுக்கு உணர்த்த வேண்டும். தனியொருவரின் உயர்வு இனத்துக்கு என்ன நன்மை செய்யும்? தமிழ்ச்சமுதாயம் உயர வேண்டுமா ? தனி ஒருவன் அதோ ஒரு தொழிற்சாலையைத் திறமையாக நடத்துகிறான் என்று சொல்லும் நிலை போதாது. தமிழர் பலர் கூடி நடத்தும் தொழிற்சாலை அதோ! திறமையாக நடத்தப்படுகிறது என்ற புகழ்நிலை

வரவேண்டும்; வளர வேண்டும். அன்றுதான் தமிழர் சமுதாயம் உயர வழிபிறக்கும்.

இன்றுள்ள தமிழகத்தில் தனி மரங்களாகத் தமிழர் உயர்வதையே காண்கிறோம். தோப்பாகக் கூடி உயர்வதைக் காண்கிறோமா ? இல்லையே! இது பெருங்குறை. ஒற்றுமை இல்லாமையே இதற்குக் காரணம் என்று உணர்கிறாயா ? தமிழர் நான்குபேர் சேர்ந்து ஒரு மனமாய் ஒன்றை நடத்த முடியாது, நடத்தினாலும் அது நெடுங்காலம் நீடிக்காது என்ற பழிச்சொல் உன் செவிக்கு எட்டியிருக்குமே! பிரிக்கும் ஆற்றல் உண்டு. பிணைக்கும் ஆற்றல் இல்லை என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா ?

இனி, ஆக்கவேலைமுறைகள் எவை என எனக்குத் தெரிந்தவற்றை எழுதுகிறேன்.

தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபைமுதல் நீதிமன்றம்வரையில் தமிழ் வழங்க வேண்டும். கல்விமொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கவேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்குத் தயங்காமல் ஆட்சி மொழியாகவும் கல்விமொழியாகவும் ஆக்கவேண்டும் என்று உணர்ந்திடு. இவ்வாறு பேசிக்கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரை செய். கடிதம், பணவிடை, விளம்பரப்பலகை, விற்பனைச்சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. இவற்றைத் தமிழில் எழுதினால் அஞ்சல் ஊழியர், வணிகர்கள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழில் படிக்கச் செய்வதுபோல் ஆகும். இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படி செய்வதுபோல் ஆகும்.

நீ யாருடனும் தமிழிலேயே பேசு. உலகத்தார் எல்லாம் அவரவர் தாய்மொழியில்தான் பேசுகின்றனர். தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டும் பிறமொழியில் பேசு. திருமணம், வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து.

சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள். மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்று.

நான்குபேர் சேர்ந்தால் அவர்களிடையே பண்பாலும் செயலாலும் கருத்தாலும் கொள்கையாலும் ஒற்றுமையும் உண்டு வேற்றுமையும் உண்டு. ஒற்றுமையான பகுதிகளை மட்டும் எடுத்துப்பேசு. வேற்றுமைப் பகுதிகள் இங்கு இப்போது வேண்டுவதில்லை என்று விட்டுவிடு. வேற்றுமைப் பகுதிகளை வற்புறுத்திப் பேசினால் பொதுவேலை நடக்காது; நம்பு.

வெளிநாட்டுத் துணியை மறுப்பதுபோலத் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் நன்மை செய்யாத செய்தித்தாள்களை விலக்கு. நாட்டுக்கும் மொழிக்கும் இடையூறான நிலையங்களைப் போற்றாதே, உன் காசு அவற்றிற்குப் போகாமல் காத்துக்கொள். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர் நடத்தும் உணவுவிடுதி, மருந்துக்கடை, துணிக்கடை முதலியன சிறிது தொலைவில் இருந்தாலும், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், வேறு குறையிருந்தாலும், அங்கேயே சென்று வாங்கு. அவசரத்தின் காரணமாகவோ, வேறு காரணத்தாலோ, தவற நேர்ந்தால், தவறு என்று உணர்ந்து வருந்து. கூடியவரையில் தமிழ்நாட்டில் தமிழ்த் தொழிலாளிகளால் செய்யப்பட்ட பொருள்களையே வாங்கு.

உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்றாதே; பழிக்காதே; வெறுக்காதே; அயலானின் தாயைப்பழித்து வெறுக்காதே. அயலானின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும். அத்தகைய அன்புதான் நிலையானது; நீடிப்பது.

தமிழர்களிடையே உள்ள பகை, பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே; அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று. சுவையாக இருந்தாலும் முன்னவையை நாடாதே. சுவையற்றிருந்தாலும் பின்னவையைப் போற்று. கொள்கைகளும் கட்சிகளும் இயக்கங்களும் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தோன்றியவை. ஆகவே கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர்.

தமிழ்நாடு உயரவேண்டும் என்றால் இங்குள்ள மலையும், காடும், நிலமும், நீரும் உயர்தல் அல்ல. இங்கு வாழும் யாவரும் ஒன்று என்று கருது. ஆகவே இந்நாட்டில்

உள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பிச்சை எடுத்தல் முதலிய கொடுமைகள் ஒழியவேண்டும் என்று கருது. ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை என்று பாரதியார் கண்ட கனவைப் போற்று. வறியவர்களைக் காணும்போதெல்லாம் நினை.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் நல்ல நிலை வரவேண்டும். உலகம் ஒரு குடும்பமாக வாழவேண்டும் என்று ஆர்வம் கொள். அந்த நிலை வந்தால், நாட்டுப்பற்று என்பது வேண்டாததாகிவிடும் என்று அறிந்துகொள். அதுவரையில் நம்நாட்டிற்கு நாம் செய்யவேண்டிய கடமை இருக்கிறது என்பதை மறவாதே.

ஊர்க்கெல்லாம் பொதுக்காவல் சிறந்தமுறையில் ஏற்படும் வரையில் ஒவ்வொருவரும் தம் வீட்டைத் தாழிட்டுக் காத்துக் கொள்ளவேண்டும் அல்லவா? அதுபோல, உலகத்திற்குப் பொதுவான ஒரு சிறந்த ஆட்சிமுறை ஏற்படும்வரையில், நம் நாட்டை நாம் தவறாமல் காத்துக் கொள்ளவேண்டும். அது குறுகிய நோக்கம் அன்று; இன்றியமையாத கடமை என்று உணர்ந்துகொள்.

உன் மானத்தைவிட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வைவிட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர், உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும்போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு. தலைமை உன்னைத் தேடிக்கொண்டு வந்தால் வரட்டும். நீ அதைத் தேடிக் கொண்டுபோய் அலையாதே. நீ தேட வேண்டுவது தொண்டு. தலைமை தாங்குவதும் ஒருவகைத் தொண்டுதான். தன்னலம் அற்றவர்க்கு அது பொறுப்பும் சிக்கலும் மிகுந்த தொண்டு. அத்தகைய தலைமைப் பொறுப்பு எப்போதாவது உன்னை நாடி வந்தால் ஏற்றுக்கொள். ஆனால், ‘தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து’ என்பது உன் நெறியாக இருக்கட்டும்.

இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார். ‘அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால்தான் வீழ்ச்சி நேர்ந்தது’ என்கிறார் விவேகானந்தர். ஆகையால், பொதுநலத்திற்காகக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல், தொண்டு செய்தல் இவற்றைப் பெருமையாகக் கொள். மேலும், நான் விரிவாக

எழுதிக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. உனக்குப் போதிய அறிவும் திறமையும் இருக்கின்றன. அவற்றைத் தக்க வழியில் பயன்படுத்த வேண்டுமே என்பதுதான் என் கவலை. அதனால்தான் இவ்வளவு எழுதினேன்.

உன் அண்ணன்,

வளவன்

**4. பேரறிஞர் அண்ணா**

**அண்ணாவின் கடிதம்**

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிவினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே,

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னின் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி

நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்துவந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய். நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன்.

எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்குதடையற்ற நிலையில் இருந்துவந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.

ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது — பிறகு — விடு — அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!' என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.

"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்"

என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ்மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968

அண்ணன்,

அண்ணாதுரை

### 5. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் 'டைரி' என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான 'டைஸ்' என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் 'ஒரு நாளுக்கான முடிவு' என்னும் பொருளைத் தரும். முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் குழுமத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.

இவருடைய நாட்குறிப்புகள் *25* ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவதோடு. அக்காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்று ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றன.

**ஆனந்தரங்கர்**

பிரான்சுவா மர்த்தேனுக்குப் பிறகு கியோம் ஆந்த்ரே எபேர் புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர்தம் தரகராக 'நைனியப்பர்' நியமிக்கப்பட்டார். நைனியப்பரின் மைத்துனர் திருவேங்கடம் என்பவரின் மகன் ஆனந்தரங்கர். இவர் 1709ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30ஆம் நாள்

சென்னையிலுள்ள பெரம்பூரில் பிறந்தார். தம்முடைய பதினேழு வயதில் தந்தையை இழந்த ஆனந்தரங்கர், பிரெஞ்சு மேலதிகாரி 'அலனுவார்' உதவியால் பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் தோய்க்கும் கிடங்குக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் 'துய்ப்ளே' காலத்தில் தலைமை மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார்.

**நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்**

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்கால கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

10.09.1736ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

1758ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பார் தொடங்கினார். கோட்டையை இடித்தும் வீடுகளைத் தரை மட்டமாக்கியும், மதிலை இடித்து அகழியைத் தூர்த்தும் கூடக் கோட்டையை லல்லியால் கைப்பற்ற முடியவில்லை. அக்கோட்டையின் கவர்னர் 'மேஸ்தர் பிகட்' மகத்தான வெற்றி பெற்றார்.

**நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்**

இவரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

'11.06.1739ஆம் நாள் புதுச்சேரியின் ஆளுநர் 'துய்மா' பிறப்பித்த ஆணையில், புதுச்சேரிப் பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழிப் பகுதியிலும் பட்டணத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீறியவர்களிடமிருந்து பெறப்பட்ட தண்டத்தொகையில் இரண்டு பணம் பிடித்துக் கொடுப்பவருக்கும், மீதி நான்கு பணம் சாவடிக்கும் உரியது என்று அறிவிக்கப்பட்டது. இது தெரியாமல் பலரும் தண்டம் கட்டியதாக' ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாட்குறிப்பு, பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து வீடுகளில் திருடி வரும் கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனைக் கடைத்தெருவில் தூக்கில் தாங்கவிட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடிகளும் தரப்பட்டன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது. கணக்கு வரவுசெலவுப் பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன.

ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும். தமது மூலதனத்திற்கு ஏற்ப ஒவ்வோராண்டும் எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்பது முன்பே திட்டமிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடைய, கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் 08.05.1738 அன்று புதுச்சேரியை அடைந்துள்ளது. கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிலர், கழகத்தின்

வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். துணிகள், வர்த்தகருக்கு விற்கப்பட்டபோது உரிய இரசீதுகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 100க்கு 320 என்ற விகிதத்தில் அவர்கள் ஆறு திங்களுக்குள் கழகத்திற்குப் பணத்தைச் செலுத்திவிடுவதாகவும் கையெழுத்திட்டுக் கொடுத்தனர். வணிகக் கழகத்தின் அதிகாரியான கொர்னே இவற்றைப் பெற்றுப் பாதுகாத்துள்ளார்.

புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. இதற்கான ஆணையை 10.09.1736 அன்று கனகராயர் பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின. எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பிரெஞ்சு மன்னரின் ஆணையின் பேரில் 1739ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது. பல்வேறு விதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். அவை புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன் முதலியன.

**ஆனந்தரங்கரின் பதிவுகள்**

1745ஆம் ஆண்டு 21ஆம் நாள் வியாழக்கிழமை மாலைப் பொழுதிலே வீசிய பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடியதனை,

'அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது!' என்று மனம் நொந்து எழுதியுள்ளார்.

இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள் எல்லோரும் உணவும் நீரும் இன்றி வாடினர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைபட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. மக்கள் எல்லோரும் கப்பல் வருகையையே எதிர்பார்க்கத் தொடங்கினர். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், 'கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும்

மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது' என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

**ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள்**

அவருடைய இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம் வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்துகொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார்.

1736ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவுசெய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாட்குறிப்பும் முடிந்துள்ளது. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை, வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

| |
|---|
| உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் 'இரண்டாம் சார்லஸ்' மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 - 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் |

முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.

ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர்.

வ.வே.சு.

ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்

**480 காசு -** ஒரு ரூபாய்

**60 காசு -** 1 பணம்

8 பணம் - 1 ரூபாய்

24 பணம் - ஒரு வராகன்

1 பொன் - 1/2 வராகன்

1 வராகன் – 3 அல்லது 3.2 ரூபாய்

1 மோகரி - 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்

1 சக்கரம் - 1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்.

புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.

அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், 'இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர்

விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

**ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள்**

1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்